**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**O.S.No.267/2021**

பெயர் :– சாந்தி (வா.சா..1)
த/பெ. :–
தேதி :– 19.11.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் எனக்காக மட்டும் தாக்கல் செய்துள்ளேனா அல்லது அனைவருக்காகவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அனைவருக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். அனைவருக்காகவும் பிரமணா வாக்குமூலம் தாக்கல்செய்துள்ளேன் என்று நான் தாக்கல்செய்த பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் Deposition ஆகியவற்றில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பமும். வழக்குரையில் உள்ள கையொப்பமும் வேறுபட்டுள்ளது என்று சொன்னால் இரண்டுமே நான் போட்டதுதான். இந்த கையொப்பங்கள் சம்பநதமாக தடயவியல் கையெழுத்து நிபுணரிடம் ஆய்வுக்கு அனுப்புவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

தாவாவில் குறிப்பிட்டுள்ள 2ம் அயிட்ட சொத்து செல்வராஜ் என்பவரின் பொது குடும்ப பணத்தினைக்கொண்டு வாங்கப்பட்டது என்பதற்காக எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அது எங்களுடைய தாத்தாவின் ஓய்வூதியம் மற்றும் எனது தகப்பனார் செலவிற்காக மாதா மாதம் செலவிற்கு கொடுக்கும் பணத்தினை சேர்த்துதான் 2ம் அயிடட சொத்து வாங்கப்பட்டது. எனது தாத்தா அவரது ஓய்வூதிய பணத்தை கொண்டும் செலவிற்காக கொடுத்த பணத்தை கொண்டும் வாங்கப்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அது கமலத்தம்மாளால் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. பாட்டி தாத்தாவின் ஓய்வூதிய பணத்தை மட்டும் தான வைத்திருந்தார். அவர் வேறு வெளியில் சென்று வேலை பார்த்தது கிடையாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் நான் கூறியதற்கு எந்த வித

ஆதாரமும் கிடையாது என்று சொன்னாலும் சரியல்ல. இது கமலத்தமாளின் தனிப்பட்ட சொத்து என்று உயிலில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை உயில் உள்ள விபரம் எங்களுக்கு தெரியாது.

27.10.2021 அன்று இவ்வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும்போதுதான் உயில் உள்ள விபரம் தெரியும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் Aஅயிட்ட சொத்தில் 1/4 பாக சொத்தினை 1ம் வாதி குணசீலன் அவர்கள் 1ம் பிரதிவாதி மனோகரன் அவருக்கு பாகப்பிரிவினையாக எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு கால் நடக்க இயலாது. அவர் யாருடைய துணையும் இல்லாமல் தனியாக செல்ல இயலாது. எனக்கு திருமணம் ஆன உடனேயே 2000ல் எனது தாயாரும் தகப்பனரும் என்னுடன் திருப்பூரில் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். நானும் திருப்பூரில் தான் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்குரையில் எங்களது முகவரி என்ற இடத்தில் குத்தாலம் முகவரி குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் எல்ல நல்லது கெட்ட காரியங்களுக்கும் இந்த முகவரியில் இருந்தான் செய்வோம். இந்த சொத்து உள்ள முகவரியில் தான் எது தகப்பனார் வசித்து வந்தார் என்ற காரணத்தினால் தான் இந்த முகவரி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வாதிகள் அனைவருக்கும் குத்தாலம் முகவரி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனது தகப்பனார் குத்தாலம் முகவரியில் தான் நிரந்தரமாக இருந்து வந்ததாலும் நாங்கள் அங்கிருந்துதான் திருப்பூர் சென்றதாலும் எங்கள் அனைவருக்கும் குத்தாலம் முகவரி கொடுத்தோம். நாங்கள் தற்போது யாரும் குத்தாலத்தில் வசிக்க வில்லை என்றால் சரிதான். நாங்கள் யாருமே 2000ல் இருந்து குத்தாலம் முகவரியில் இல்லை என்றால் சரியல்ல. எனது பெரியப்பா இறந்து 2005 லிருந்துதான் வாதிகள் அனைவரும் அங்கு வசிக்கவில்லை.

நான் மேலே 2000 என்றும் தற்போது 2005 என்றும் மாறி மாறி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் 2000லிருந்து 2005 வரை நாங்கள் திருப்பூரிலிருந்து அனைத்து காரியங்களுக்கும் வந்து வந்து சென்றுகொண்டிருந்தோம், என்னிடம் தற்போது காட்டப்படும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் 2வது ஆவணம் எனது தகப்பானாரின் கையொப்பம் கிடையாது. அதில் உள்ள மூன்று கையொப்பங்களும் வேறு வேறாக வித்தியாசப்படுகிறது. வழக்குரையில் உள்ள என்னுடைய தகப்பனார் கையொப்பமும்

இந்த ஆவணத்தில் உள்ள கையொப்பமும் ஒன்றாகத்தான உள்ளது என்றாலும் நான் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்ற சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் 2 வது சாட்சியாக முத்தமிழ்செல்வன் என்பவர் கையொப்பம் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முத்தமிழ் செல்வன் எனது அக்கா கவிதா அவர்களின் கணவர் என்று சொன்னால் சரிதான்,. எனது அக்காவும் அவரது கணவர் முத்தமிழ் செலவன் அவர்களும் 1998லிருந்து தனித்தனியாக வாழ்ந்துகொண்டிருந்கிறாரகள். தனித்தனியாக பிரிந்து வாழ்ந்த வருகிறார் என்பதற்காக ஆவணகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தற்போது கேள்வி கேட்டதற்காக தான் நான் பதில் சொல்லுகிறேன்.

நான் எனது தகப்பனார் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னாலும் அதற்காக ரூ.20,000/–பெற்றுசென்றுள்ளார் என்று சொன்னாலும் சரியல்ல. எனது தகப்பனார் 2000ஆண்டிலேயே ஓ்யவூதியம் பெற்றுவிட்டார் அதனால் அவரது கையில் பணம் இருந்தது. அதனால் அவர் 2002ல் இந்த சொத்தை ரூ.20,000/–ற்கு தொகைக்கு விற்க வேண்டிய அவசியம் இல்லை. நான் மேற்கூறிய விபரங்களை பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் ஆவண எண் 15காக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பம் கிடையாது. ஏற்கனவே காட்டிய மூன்று கையொப்பமும் இந்த கையொப்பமும் வேறுவேறாக உள்ளது. நான் மேற்கூறிய ஆவணங்களை பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதனால் தான் 2ம் அயிட்ட சொத்திற்கு மட்டும் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் முதல் அயிட்ட சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. முதல் அயிட்ட சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் எனது வழக்கறிஞரிடம் எடுத்து கொடுத்துள்ளேன்.

ரவி என்பவருக்கும் குந்தையம்மாள் ஆகியோர்களுக்கு இடையே விவாகரத்து ஆன விபரம் தெரியுமா என்றால் தெரியும். ரவி அவரகள் விவாகரத்துக்குபின் மான்பிழி என்பவரை திருமணம் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த பாகப்பிரிவினை வழக்கில் ரவி என்பவர் மான்விழி என்பவரை தரப்பினராக சேர்த்துள்ளீர்களா என்றால் இல்லை. அவரின் முதல் மனைவியின் மகள் ஜெயபாரதியை தரப்பினராக சேர்த்துள்ளேன். ரவி என்பவருக்கு ஜெயபாரதியோடு

சேர்த்து மான்விழி என்பவர்கள் சட்டபூர்வமான வாரிசு என்பதால் அவரை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு செல்லத்தக்கது என்ற சொன்னால் முதல் மனைவியின் குழந்தையை தான் வாரிசு என்றும் 2ம் மனைவி வாரிசாக வருவார் என்று எனக்கு தெரியாததால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. 28.12.1998 அன்று கமலம் என்பவர் 2ம் பிரதிவாதி அசோக் குமார் பெயரில் உயில் எழுதி வைத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயில் ஆவணம் குத்தாலம் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் இந்த வழக்கிற்கு பிறகு இது சம்பந்தப்பட்ட விபரத்தை குத்தாலம் பதிவு அலுவலம் சென்று கேட்டு தெரிந்துகொண்டேன். அங்கு பதியப்பட்டதாக தெரிந்துகொண்டேன். கமலம் என்பவருக்கு 7, 8 பேரன்பேத்திகள் உள்ளர்கள் . அதில் 2ம் பிரதிவாதிக்கு மட்டும் உயில் எழுதி வைக்க வாய்ப்பு இல்லை. 2ம் பிரதிவாதிக்கு அப்போது 15 வயதுதான் ஆனது அதனால் அவர் பாட்டிக்கு தனிப்பட்ட முறையில் ் அவர் செய்திருக்க வாய்ப்பில்லை. குழந்தையம்மாளும் என்னுடைய தாய் சொர்ணம் என்பவலரும் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான்.

எனது தகப்பனாரும் அவரது சகோதரரும் என்னுடைய அம்மாவையும், அவரது சகோதரியான குழந்தையம்மாளையும் திருமணம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். ரவி குழந்தையம்மாளும் காதல் திருமணம் செய்துகொண்டார்கள். எனது பெற்றோர்கள் பெரியவர்கள் திருமணம் ஏற்பாடு செய்து திருமணம் செய்தார்கள். குழந்தையம்மாள் வேறு நபரோடு சென்று விட்டதால் தான் அவர் அவரை விவாகரத்து செய்துவிட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது தாயும் அவரது சகோதரியும் சேர்ந்து கமலம் என்பவரை சரியான முறையில் பராமரிக்காமல் அவருக்கு துன்பம் கொடுத்ததால் தான் கமலம் என்பவரை 1ம் பிரதிவாதி பாராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. கமலம் என்பவர் எழுதிவைத்த உயிலில் ரவி அவர்கள் 2ம் அயிட்ட சொத்தை அனுபவித்த அவரது காலத்திற்கு பிறகு 2ம் பிரதிவாதியான அசோக் என்பவருக்கு சேரும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்களது வழக்குரையில் இந்த வழக்கில் எனது தகப்பனார் 1ம் அயிட்ட சொத்து குறித்து 1ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் 28.12.1998 அன்று கமலம் அவர்கள் 2ம் அயிட்ட சொத்து குறித்து எழுதிவைத்த உயில் ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளதா

என்றால் இல்லை.

1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.